**SC.323/17 PW17** பாபு **12.4.18**

சாட்சி மனுவின் பேரில் திரும்ப அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு விசாரிக்கப்பட்டார்.

கு வி -- அனைத்து எதிரிகள் தரப்பில்

**28.2.17** அன்று **21** மணிக்கு முதல் தகவல் அறிக்கை பெற்று மதுரை நீதித்துறை நடுவர் எண் **4** அவர்களிடம் **23** மணிக்கு கொடுத்தேன். உயர் அதிகாரிகளுக்கு **23.15** மணிக்கு கொடுத்தேன். அதற்குரிய ஒப்புகை கொடுக்கப்பட்டது. அதனை காவல் ஆய்வாளரிடம் கொடுத்தேன். அன்றிரவே காவல் ஆய்வாளர் என்னை காவல் நிலையத்தில் வைத்து அதிகாலை **2** மணியளவில் விசாரித்தார். நான் கையெழுத்து எதுவும் போடவில்லை. இந்த வழக்கு சம்பந்தமாக என்னை மீண்டும் விசாரிக்கவில்லை. நான் சொன்ன படி சொன்ன நேரத்தில் முதல் தகவல் அறிக்கை ஒப்படைக்கவில்லை என்றாலும் கடவு சீட் கொடுக்கப்படவில்லை என்றாலும் சொன்ன நேரத்தில் ஆய்வாளர் என்னை விசாரிக்கவில்லை என்றாலும் சரியல்ல. நான் சட்டபடியான நடவடிக்கையை பின்பற்றவில்லை என்றால் சரியல்ல.

ம வி --

இல்லை.